முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1222

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.02.2023, வியாழக்கிழமை

1. அறமெனும் சக்தியாய் உலகமெங்கிலும்
அற்புதம் நிகழ்த்தவந்த குருராஜனே
சரவணச்சுடரேற்றி அருளுகின்ற
சதாசிவானந்த ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் தை மாதம் 19 ம் நாள் 02.02.2023, வியாழக்கிழமை)
ஆசிதந்து அரங்கன் உன்னுள் யானிருக்க
அணுகி உன்பால் தீட்சைபெறும் மக்களுக்கெல்லாம்
3. மக்களுக்கெல்லாம் ஞானசித்தி உறுதியாகும்
மரணம் வெல்லும் மகத்துவம் இலகுவாய் எட்டும்
தேக்கமின்றி ஓங்காரக்குடில் நோக்கி
தொடர்ந்து வரும் மக்கள் வாழ்வில்
4. வாழ்விலே விருப்பங்கள் வெற்றிகொள்ளும்
வாழுங்காலமே ஞானிகளாகும் வாய்ப்பும்
ஊழைவென்று உலகை மாற்றும் சக்தியும்
உயர்வான அரங்கன் ஆசியால்கிட்ட நேரும்
5. நேர்மைகொண்டு அரங்கன் தொடர்புகூட்டி
நிலவுலகில் அரங்கன் தர்மத்தைக்காத்து
பெருமைபட சன்மார்க்கநெறியில் திளைத்து
6. பிசகின்றி உலகோர் தொடர்ந்து வந்தால்
வந்திட உலகமாற்றம் சடுதி வரமென உலகோர்க்கு
ஞான சித்தியும் உறுதி
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–